# செம்பதாகை

மலர்: 2
இதழ்: 8-9
ஆவணி-புரட்டாசி
ஆகஸ்ட்-செப்ரெம்பர் 1980
விலை சதம்: 60

புரட்சிகர வெகுஜன ஏடு

## தார்மீகம் பேசும் யூ. என். பி. ஆட்சியே

# வேலைநிறுத்தம் செய்தோருக்கு மீண்டும் வேலை கொடு!!

நாடு தீப்பற்றி எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்தானாம்; வேலை நிறுத்தம் தொடர்பாக அரசாங்கத்தின் அக்கறையின்மை இதையே ஞாபகப்படுத்துகின்றது. அரசாங்கத்தின் உதாசீனம், மிரட்டல், எதிர்ப்பிரசாரம் என்பவற்ருல் ஏற்கனவே இலட்சக்கணக்கான உழைக்கும் மக்களும் அவர்களது குடும்பங்களும் பட்டினிக்கும் ஏனைய இடர்களுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர்; வேலையிலிருந்து தாமாகவே விலகிவிட்டதாக அரசாங்கத்தால் கூறப்படும் வேலைநிறுத்தம் செய்த சகல தொழிலாளர்களையும் அரசு எவ்வித நிபந்தனையுமின்றி மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளல் வேண்டும்.

தனது நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் தனக்கும் ஒரு கணிசமான தொழிலாள வர்க்கப் பகுதியினருக்குமிடையில் ஒரு மோதலை உருவாக்கியுள்ளது. அரசாங்கத்தின் புள்ளி விபரப்படி 40,000 பேர் வேலை இழந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. ஆனல் உண்மை ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டோர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதற்காகப் பழிவாங்கப்பட்டு வீதியில் நிறுத்தப்பட்டுள்ளனர். வேலை நிறுத்தம் செய்யும் உரிமை சட்டரீதியானது; புனிதமானது; மீறப்பட முடியாதது. ஐக்கிய நாடுகள் சாசனமும், சர்வதேச தொழில் ஸ்தாபனமும் எதுவித சந்தேகத்திற்குமிடமற்ற வார்த்தைகளால் தொழிலாளர்கள் கோரிக்கைகளை வெல்வதற்காக, தமது உழைப்பை வழங்க மறுக்கும் உரிமையைக் கொண்டுள்ளனர் எனக்கூறுகிறது. எந்த ஒரு வேலைநிறுத்தமும் சட்டவிரோதமாகாது. ஒரு பாசிச போக்குடைய அரசாங்கம், ஆமாப்போடும் அதிகப் பெரும்பான்மையுடைய உதவியுடன் சட்டவிரோதமாக்கினல் ஒரு வேலை நிறுத்தத்தை சட்டவிரோதமாக்கிவிட முடியாது. நாடாளுமன்றம் ஆணைப் பெண்ணுகவும், பெண்ணை ஆணுகவும் மாற்றும் வேலையைத் தவிர இந்தப் புவியில் எதையும் செய்துவிட முடியும் என்ற அரசாங்கத்தின் புளுகுகள் அதன் மூர்க்கத்தனத்தையே அம்பலப்படுத்துகிறது. நாடாளும்மன்றம் அதி உயர்ந்த அதிகாரத்தைக் கொண்டுள்ளது உண்மைதான். என்ருலும் அது அந்த அதிகாரத்தை மக்களிடமிருந்தே பெறுகின்றது. எனவே மக்களிடமே அதியுயர்ந்த அதிகாரமுள்ளது. மக்கள் தங்களுக்கு ஒரு நல்ல ஆட்சியைத் தருவதற்காக அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்குகிருர்களே தவிர தமது சுயாதிபத்திய உரிமைகளைப் பறிப்பதற்காகவோ அல்லது வயிற்றலடிப்பதற்காகவோ அல்ல.

வேலைவழங்குவோன் அல்லது அரசாங்கம் ஒரு வேலைநிறுத்தத்தை நியாயமற்றதெனக் கருதும் பட்சத்தில் ஒரு குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருமாறு காலஎல்லை வழங்கி அதே சமயம் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுக்க வேண்டும். ஆனல் அந்த மாதிரியான காலக்கெடு வழங்கப்படவுமில்லை; தொழிற் சங்கங்கள் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்படவும் இல்லை. உழைக்கும் மக்களின் எந்த உழைப்பு யூ. என். பி யினுல் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒட்டுண்ணி வர்க்கத்தைக் கொழுக்க வைத்ததோ—பாணுக்கு பட்டராகவும், ஜாமாகவும் மாறியதோ — அந்த உழைப்பை வழங்கும் தொழிலாளர்கள் ஆரம்பத்திலிருந்தே கேவலமாக நடாத்தப்படுகின்றனர். அரசாங்கத்தின் வார்த்தையின்படி இப்போது இடம் பெறுவது வேலைநிறுத்தமல்ல ஒரு கதவடைப்பேயாகும். நாட்டிலுள்ள சட்டங்களின் பிரகாரம்! ஒரு கதவடைப்பு சட்டவிரோதமானது. தாமே சட்டவிரோதமாகச் செயற்பட்டுக்கொண்டு, அரசாங்கம் தொழிலாளர்கள் சட்டவிரோதமாக செயற்படுவதாகக் குற்றம் சுமத்துகிறது. ஒருவன் நிர்வாணமாக நடக்க விரும்பினல் நிச்சயமாக அவன் கண்ணுடி வீட்டில் இருந்து அதைச் செய்வது இல்லை.

ரூபா 300 சம்பள அதிகரிப்பு வாழ்க்கைச் செலவுப் புள்ளி அதிகரிப்பு ஒவ்வொன்றிற்கும் ரூபா 5 அலவன்சும் என்ற தொழிலாளர்களின் கோரிக்கைகள் நியாயமானது என்பதிற் சந்தேகமில்லை. மத்தியவங்கி ஏனைய அரச நிறுவனங்கள் உட்படச் சகலரும் நாட்டில் பணவீக்கம் நிலவுகின்றது என்பதை ஏற்றுக் கொள்கின்றனர். வாழ்க்கைச் செலவு மூன்று மடங்காக உயர்ந்துள்ளது என்பதையும் ஒத்துக் கொள்ளுகின்றனர். இந்த உண்மையை ஏற்றுக்

(6-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ்படை புடை சூழ

# அமிரின் பிறந்ததின விழா

நூற்றுக்கு மேற்பட்ட பொலிஸ் படையினர் முன்னும் பின்னும் புடைசூழ தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகமான திரு. அ. அமிர்தலிங்கம் திருநெல்வேலிச் சிவன் கோவிலிருந்து பிறந்ததின விழாக் கூட்டம் நடைபெற்ற இடம்வரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். பொலீசாரின் எண்ணிக்கையை விடச் சற்றுக் கூடுதலானேரே ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

அமிர்த்தலிங்கத்தின் 53-வது பிறந்ததின விழாக் கூட்டம் அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலை வைத்து அமிர்தலிங்கத்தின் கொடும்பாவி எரிக்கப்பட்ட மைதானத்திற்கு அருகாமையிலேயே நடைபெற்றது. மிகக்குறைந்த தொகையினர் கூடியிருந்த இக்கூட்டத்தில் அமிர்தலிங்கம் தொடக்கம் காசி ஆனந்தன்வரை பேசியபேச்சுக்கள் யாழ். பல்கலைக்கழக மாணவர்களைத் திட்டித் தீர்க்கும் பேச்சுக்களாகவே அமைந்திருந்தது. அமிர்தலிங்கம் அவர்கள் ஒரு கட்டத்தில் பேசும்போது பல்கலைக்கழக மாணவர்கள் ''ஒன்றும் தெரியாத முட்டாள்கள் என்றும், இவர்கள் ''குதிரை ஓடியதன்'' மூலம் பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்தவர்கள்'' என்றும் பேசினர். இது சில காலத்திற்கு முன்பு அமைச்சர் சிறில் மத்தியூ அவர்கள் பல்கலைக்கழக தமிழ் மாணவர்களைப் பற்றிக் கூறியதைலே இப்போது அமிரும் கூறுகிருர். அப்படியாயின் அன்று சிறில் மத்தியூ அவர்கள் கூறியதை இப்போது அமிர்தலிங்கம் ஏற்றுக்கொண்டுள்ளார் போலும். தானும் ஒருகாலத்து பல்கலைக்கழக மாணவன் தான் என்பதை பலமுறை ஞாபகப்படுத்திய அமிர்தலிங்கம் யாழ் பல்கலைக்கழக மாணவர்களைத் திட்டித் தீர்ப்பதில் தனது குறைந்த நேரப் பேச்சை நிகழ்த்தி முடித்தார்.

ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை என்று கேட்டு இளைஞர்களைத் தவருன வழிகட்கு இனவெறி ஊட்டிய காசி ஆனந்தன் மாவட்ட சபைகளுக்காக வக்காலத்து வாங்கி பேசிய பேச்சே பேச்சுத்தான். தமிழர் கூட்டணிமாவட்ட சபையை ஆதரிப்பதற்கு ஒரு உதாரணம் காசி ஆனந்தன் கூறியபோது சில கூட்டணி ஆதரவாளர்களையே 'ஐயோ' எனக் குளறும் நிலைக்குத் தள்ளியது; இதுதான் உதாரணம். திருகோணமலையில் ஒரு சிங்களக் குடியேற்றம் நடைபெற்றதாம்! அது ஆறு மாதங்களாக திருமலை எம். பிக்குத் தெரியவில்லையாம். மாவட்டசபையில் தாங்கள் இருந்தால் இதுபோன்ற விடயங்களைச் சிரமமின்றிக் கண்டுபிடித்துவிட முடியும். இதைவிட வேறு எந்த விதமான உதாரணமும் மாவட்டசபையை ஆதரித்து சப்பை கட்டுவதற்கு காசி ஆனந்தனுக்குக் கிடைக்காது போனது அரசியல் வங்குரோத்தேயன்றி வேறு எதுவும் இல்லை.

இக்கூட்டத்திற்கான பாதுகாப்பை உயர் அதிகாரிகளின் நேரடிக் கண்காணிப்பில் கொடுத்த பொலிஸ் படை, கூட்டணிக்கு விரோதமான பத்திரிகை எதையும் விற்கக்கூடாது என்று பகிரங்கமாகவே தடைசெய்துவிட்டது.

இலங்கை
**தேசபக்த வாலிபர் இயக்கத்தின்**

**வட-பிரதேச மாநாடு**

**20-9-80 சனிக்கிழமை**

யாழ்-றிம்மர் மண்டபத்தில் நடைபெறும்
மாலை நிகழ்ச்சித் தொடரில்

தோழர்கள்: **எச். எல். கே. கரவிட்ட**
(பொதுச்செயலாளர் உழைக்கும் மக்கள் கட்சி)
**கே. ஏ. சுப்பிரமணியம்**
(இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி இடது)
**கே. செந்திவேல்**
(இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி இடது)
**நிகால் டயஸ்**
(ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி மா, லெ.)
ஆகியோர் சிறப்புரை வழங்குவர்

இ. தே. ப. வா. இயக்கம்
வடபிரதேசக் கமிட்டி

**ஆளும்வர்க்க பலாத்காரம் ஜனநாயக கோஷங்களால் மறைக்கப்படுகிறது!**

# கருத்தும் கண்ணோட்டமும்

ஜனமகன்

# நிதி அமைச்சர் மாற்றப்படலாம்?

## அமிரின் நம்பிக்கைக்குரியவர் ஜே. ஆர்.
## அபிவிருத்திப் பணம் சட்டைப்பைகளில்
## மாவட்ட சபைகளுக்கு பின்னால்?
## மரணச் சடங்கிலும் குழிபறிப்பு!

நாட்டின் பொருளாதாரத்திலே நெருக்கடிகள் கூர்மையடையும் வேளைகளிலேயே முதலாளித்துவ அரசாங்களிலும், பாராளுமன்றஅரசியல் கட்சிகளிலும் உள்முரண்பாடுகளும் தலைமைப் பதவிப் பிரச்சினைகளும் முளைவிடுவது வழக்கம். தற்சமயம் அந்த நிலைமை ஆளுங்கட்சியில் வெளிப்படத் தொடங்கியுள்ளது. நிதி அமைச்சர் ரொனி டீ மெல் மாற்றப்படலாம் என்ற வதந்திகள் பரவலாக அடுபடுகின்றன. அமைச்சர் ஒருவர் மாற்றப்படுவதல்ல முக்கியம். அதற்குரிய காரணங்களும் பின்னணியுமே உற்றுநோக்க வேண்டியவைகள்.

அண்மையில் பாரிஸ் நகரிலே ''இலங்கைக்கு உதவி அளிக்கும் நாடுகள் குழு'' கூட்டம் நடந்தபொழுது ஏகமனதாக ஒரு கருத்துந் தெரிவிக்கப்பட்டதாம். யூ. என். பி. பதவிக்கு வந்த நாள் முதல் கோடிக்கணக்கான டொலர்களை மேற்கு நாடுகள் சிலவும் யப்பானும் ''உதவி'' என்ற பெயரில் கடன்கொடுத்து வந்திருப்பதை யாவரும் அறிவர். ஆயினும் குறிப்பிடத் தக்க வளர்ச்சியோ முன்னேற்றமோ நாட்டில் ஏற்படவில்லை என்பதை கடன் வழங்கும் நாடுகள் சுட்டிக்காட்டினவாம். கோட்டைப் பகுதியிலே 'ஸ்ரீ ஜயவர்த்தனபுரம்' என்ற பெயரில் புதியதொரு தலைநகரை அமைப்பதற்காக சதுப்பு நிலங்களை நிரப்பி ஸ்திரப்படுத்துவதற்காகவும், கிடைத்த வெளிநாட்டுக்கடனில் கணிசமான பகுதி செலவிடப்பட்டுள்ளது. அது ஜனாதிபதியின் ஆசையை நிறைவேற்றுவதற்கான அனாவசியமான வீண் செலவு; மற்றையது பிரதமமந்திரியின் வீடமைப்புத் திட்டங்கள். ஈடிணையற்ற 'நிர்மாணி' என்று புகழப்படுவதற்காக சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் வி. என். நவரத்தினம் போன்றோரின் புகழ்மொழிகளுக்காக — புதிய கிராமங்களை அமைப்பதாகக் கூறிச் செலவிடும் விரயம். விஷயமறிந்த ஆய்வாளர்களின் அபிப்பிராயப்படி இந்தப் புதிய கிராமங்கள் பல புதிய சேரிகளாக மாறிவிடும் சாத்தியம் உண்டு. இவ்விரு வீண் செலவினங்களையும் இயன்ற வரையில் குறைத்தாலன்றி கடனுதவிகளால் பயன் எதுவும் இல்லை என்று குழுவினர் ஆணித்தரமாக கருத்துத்தெரிவித்ததை நிதிஅமைச்சர் டீ மெல் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொண்டாராம். அதனால் சம்பந்தப்பட்ட ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மனகசப்பு. குறிப்பிட்ட இரு திட்டங்களையும் நிறுத்த இயலாது என்று ஜனாதிபதி கூறிவிட்டாராம். திறைசேரி அதிகாரிகளும் வெளிநாடுகளின் அபிப்பிராயமே சரி என்று நிதி அமைச்சருக்கு ஆலோசனை கூறியிருக்கின்றனராம். இதனால் தமக்குள்ளே இருக்கக்கூடிய முரண்பாடுகளை ஒரு கணம் மறந்துவிட்டு, வேறு ஒரு நிதியமைச்சரைநியமிக்க ஜனாதிபதியும் பிரதமரும் விரும்புவதாக விஷயமறிந்தவர்கள் கூறுகிறார்கள். ஒரு நிதியமைச்சர் பதவி இழப்பதோ மற்றொரு 'மச்சான்' அந்தப்பதவிக்கு வருவதோ பெரிய விடயமல்ல. நிதியமைச்சர் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாமல் திண்டாடுவதே நாம் கவனிக்கக் கூடியதாகும். மேற்படி இரண்டு திட்டங்களாலும் கொந்தராத்துக் காரர்கள் கொள்ளை இலாபம் சம்பாதிப்பதைத் தவிர நாட்டுக்கு உண்மையான முன்னேற்றம் எதுவும் இல்லை.

★

கடந்த சில மாதங்களுக்குள் அரசாங்கம் மட்டுமல்ல, அதற்கு முண்டுகொடுக்க முயன்றுவரும் கட்சிகளும் கும்பல்களும் அம்பலப்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழர் கூட்டணித் தலைமையைப் போலவே ஜே.வி.பி. தலைமையும் நாளுக்குநாள் தன் சுயரூபத்தைக் காட்டி வருகின்றது. யூ.என்.பி. எதிர்ப்பைப் பொறுத்தவரையில் ரோஹணவிஜயவீராவும் சரி. தளர்பதி அமிரும் சரி; வாய்ச்சொல்வீரர்கள்தான். ஜனாதிபதியின் மனம் கோணமல் நடந்துகொள்வதையே இருவரும் தத்தமது 'பயபக்தி'யான கடமையாகக் கொண்டுள்ளனர். சில வாரங்கட்கு முன் அமிர்தலிங்கத்துடன் கதைக்கச் சென்ற பல்கலைக்கழக மாணவர் சிலருக்கு ஒரு 'டோஸ் போதனை' வழங்கப்பட்டதாம். ஜயவர்த்தனாவை தான் நன்கு அறிந்தவர் என்றும் அவரது விசால உள்ளத்தைப் பலர் சரிவர தெரிந்துகொள்ளவில்லை என்றும் அவரை நாம் நம்பவேண்டும் என்றும் அவரால் பல நன்மைகள் உண்டாக இருக்கின்றன என்றும் அடித்துக் கூறினாராம் அமிர்தலிங்கம். போயிருந்த மாணவர்களுக்குத் தங்கள் காதுகளை நம்ப முடியவில்லையாம். மனிதர் மாறுவது உண்டு! ஆனால் இப்படி ஒரேயடியாக மாறமுடியுமா? என்று மாணவர் திகைத்துப் போனார்களாம். ஆனால் அமிர் மாறவேயில்லை. அன்றும் இன்றும் கம்யூனிச விரோதியாக இருக்கும் அமிர்தலிங்கம், அதிஉன்னத முதலாளித்துவ அரசியல்வாதியான ஜயவர்த்தனாவில் முழுநம்பிக்கை வைக்குமாறு கூறுவதில் ஆச்சரியம் இல்லை. இனம் இனத்தை நாடுவது தெரிந்ததுதானே. அமிர்தலிங்கம், நவரத்தினம், செல்லத்தம்பு திருநாவுக்கரசு முதலியோர் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமது கம்யூனிச விரோத — முதலாளித்துவ சார்பான கருத்துக்களை மறைக்க முற்பட்டதில்லை. ஆகவே நாம் எதிர்பார்த்ததையே அவர்கள் செய்கின்றனர்.

அதுபட்டுமல்ல வரலாற்றின் ரீதியான நோக்கினால் அமிர்தலிங்கம் போன்றவர்கள் உண்மையில் கொழும்பில் வாழும் தமிழ்ப் பெருமுதலாளிகளினதும் வர்த்தகர்களினதும் ஊதுகுழல்களே என்பதை அறிந்துகொள்ளலாம். தமிழ் முதலாளித்துவவாதிகளின் பல்வேறு தேவைகட்கு ஏற்ப உரத்துப் பேசியும், மெதுவாகக் குழைந்தும் நாடகம் ஆடியும் இவர்கள் அரசியல் வியாபாரம் புரிந்து வருகின்றனர். இன்று ஏற்றுமதி, இறக்குமதி, துரித இலாபம் முதலியவற்றிற்கு தமிழ் முதலாளிகள் அவதிப்படும்பொழுது அமிர்தலிங்கம் தான் நினைத்தபடி நடக்கத்தான் முடியுமா? சொன்னதைச் செய்ய வேண்டிய பிரசாரகர்கள்தானே அமிர் வகையறாக்கள் மக்கள் இதனைப்பற்றி நாளுக்குநாள் அறிந்துவருகின்றனர் என்பது உறுதி.

★

உலகின் பல பகுதிகளிலும் கடன் வழங்கி எத்தனையோ நாடுகளைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் ஏகாதிபத்திய நாடுகட்கு அந்தந்த 'ஏழை' நாடுகளில பதவியிலிருக்கும அரசியல்வாதிகளும் - உயர் அதிகாரிகளும் ஊழல்களில் தோய்ந்தவர்கள் என்பது தெரியாத விடயமல்ல. இன்னும் சொல்லப்போனால் ஊழல் நிறைந்த விலைக்கு வாங்கக்கூடிய தலைவர்கள் — இருந்தால்தான் ஏகாதிபத்தியம் தழைத்தோங்க முடியும். ஏகாதிபத்தியவாதிகள் தர்மிஸ்டர்கள் அல்லர். ஆயினும் தமது பிடி திறம்பட இருப்பதற்காக வாயிலும் ஓரளவு திறமையாகத் திட்டங்கள் கடன் பெறும் நாடுகளில் நிறைவேற்றப்படவேண்டும் என்று உலக வங்கி போன்ற நிறுவனங்கள் விரும்புகின்றன. இந்த நோக்கிலேயே இன்றைய இலங்கை அரசாங்கம் கடன் உதவிகளை விரயம் செய்கின்றது என்ற விமர்சனம் மேற்கு நாடுகளில் இப்பொழுது அடிக்கடி கூறப்படுவதைக் காணலாம். சில வாரங்களுக்குமுன் இலண்டனிலிருந்து வெளிவரும் ''ஃபினான்ஷல் டைம்ஸ்'' என்ற பொருளியல் சஞ்சிகை இலங்கைக்கு வழங்கப்படும் கடனுதவி மேலிடங்களில் நிலவும் ஊழல்காரணமாக தவறானவர்களுக்கும் சட்டைப் பைகளுக்கும் சென்றுவிடுகின்றது என்றும் அதனால் விளம்பரப்படுத்தப்படும் பாரிய திட்டங்கள் பாழாய்ப்போகின்றன என்றும் காரமாகக் கூறியுள்ளது. இந்நாட்டில் உள்ள பிறநாட்டுத் தூதராலயங்களைச் சேர்ந்த அதிகாரிகளும் அந்தரங்கமாக நண்பர்களுடன் உரையாடும் பொழுது இக்கருத்தையே தெரிவிக்கிறனராம். நாட்டில் ஒரு சிமெந்துப்பை எழுபது ரூபா விற்கையில் மகாவலிபகுதியில் நாற்பது ரூபாவிற்கு வாங்கலாம். அரசாங்க சிமெந்து ஆபேஸ்! அபிவிருத்தி.....?

★

மாவட்ட அபிவிருத்தி சபைகள்பற்றி தமிழர் வியாபார கூட்டணிக்குள் கருத்து முரண்பாடுகளும் அபிப்பிராய மோதல்களும் இருப்பதாகத் தினசரிகள் நாடகம் நடத்திக்கொண்டிருக்கும் இவ்வேளையில் மாவட்ட சபைகளின் முக்கியமான ஒரு அம்சம்பற்றி சில அரசியல் அவதானிகள் நுட்பமாகக் கூறியுள்ளனர். குறிப்பாக வெளிநாட்டு வர்த்தக வட்டாரங்களின் கண்ணோட்டத்தையும் கருத்தையும் கூர்ந்து கவனித்த அவதானிகள் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர். இன்று நமது நாட்டைச் சூறையாடும் வெளிநாட்டுச் சக்திகள், பல்தேசியக் கம்பனிகள் என்ற வடிவத்திலேயே புகுந்திருக்கின்றன. ஊசிபருந்திலிருந்து உரம் வரை யாவும் வெளிநாட்டு மாபெரும் கம்பனிகளிடமே அடங்கியிருப்பதை அனைவரும் அறிவர். கொழும்பு நகரமே விரைவில் வெளிநாட்டாரின் விபசார ஸ்தலமாகவும், வர்த்தக நிலையமாகவும் மாறிவிடலாம்? இந்நிலையிலே நாட்டின் தலைநகரிலும் சுதந்திர வர்த்தக வலயம் போன்ற பகுதிகளிலும் காட்டாட்சி புரியும் அந்நிய கம்பனிகளின் செயற்பாடுகள் மக்கள் கவனத்தை கவராமல் இருப்பதற்காக மாவட்ட ரீதியில் மக்களை 'உள்நோக்க' வைப்பதும் புதிய அபிவிருத்திச் சபைகளின் பயன்பாடு ஆகும். மாவட்ட சபை தேர்தல்கள், அடிபிடிகள் பிரசாரங்கள் சிறிய பிரச்சினைகள், உள்ளூர் விவகாரங்கள் இவற்றிலே மக்கள் தமது கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்க மத்திய அரசின் ஆதரவுடனும் அனுசரணையுடனும், பிரமாண்டமான அளவிலே பல்தேசியக் கம்பெனிகள் நாட்டையும் மக்களையும் சுரண்டிக் கொள்ளை இலாபம் சம்பாதிக்க நல்ல சூழ்நிலை உண்டாகும். இதுவே அமெரிக்க நிபுணர்கள் அரசுக்கு வழங்கிய அதிமுக்கியமான ஆலோசனையாம்.

அமெரிக்க அரசியல் — விஞ்ஞான ''நிபுணர்'' ஒருவரின் கருத்துப்படி மாவட்ட சபைகளால் மற்றுமொரு விளைவும் உண்டாகுமாம்; தற்சமயம் தமிழர் வியாபாரக்கூட்டணி மட்டும்தான் பிரதேச அல்லது மாவட்ட கட்சியாக இருக்கின்றது. நாடு முழுவதற்கும மாவட்டசபைகள் அமையும்போது நாளடைவில் பல்வேறுபகுதிகளில் சிறிய சிறிய பிரதேசவாரியான கட்சிகள் தோன்றக் கூடுமென்றும் அதனால் தேசிய ரீதியான முற்போக்கு—புரட்சிகர— இயக்கங்கள் பலவீனம் அடையும் என்றும் ஜனாதிபதிக்கு நிபுணர்கள் ஆலோசனை வழங்கியிருக்கின்றனராம். வர்க்க உணர்வுடன் யாவற்றையும் நோக்கும் ஜயவர்த்தனா இவ்வாலோசனைகளையும் தமது சுத்தமான வர்க்க மனோபாவத்துடனேயே அணுகியிருப்பது வெளிப்படை. இந்தியாவிலே தோன்றிய மாநிலக் கட்சிகள்போல இலங்கையிலும் உறுகுணை, கண்டி, நீர்கொழும்பு, ஊவா முதலிய பகுதிகளில் மாவட்ட நலன்களை வற்புறுத்தும் கட்சிகள் தோன்றி வளர்ந்தால் தேர்தலில் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மை பெறுவது அசாத்தியமாவது மேலும் உறுதிப்படுத்தப்படும் என்றும் ஆலோசனை வழங்கப்பட்டிருக்கின்றதாம். இந்த அடிப்படையில் பார்க்கும் போது, தமிழர் வியாபாரக் கூட்டணி தனது பாத்திரத்தை நல்லமுறையில் வகிக்கும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

★

கத்தோலிக்க உயர்பீடம் அரசாங்கத்தின் ஆலோசனையின் பேரிலும், தமிழர் வியாபாரக்கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்தின் வேண்டுகோளின் பேரிலுப, தீவிரவாத தமிழ் இளைஞருக்கு ஆதரவு வழங்குவதை நிறுத்தியிருக்கிறது என்று முன்னர் இப்பகுதியில் நாம் எழுதியது சிலருக்கு நினைவு இருக்கலாம். அதற்கு மேலும் ருசுபோல அமைந்தது அண்மையில் நடந்த ஒரு சம்பவம். தனிநாயக அடிகளார் இறந்ததும், பண்டத்தரிப்பிலிருந்து அவரது பூதவுடலை யாழ்.நகருக்குக் கொணர்ந்து கூட்டணி அரசு செலுத்தும் நகரமண்டபத்தில் மரியாதைக்காக வைத்து, தமிழ்த் துக்கதினம் அனுட்டிக்கவேண்டும் என்றெல்லாம் ஒரு சில தீவிரவாதிகள் ஓடியாடித் திரிந்தனராம். நகர துணை மேயர், வேறு சில உறுப்பினர்கள், மாநகர கமிஷனர் முதலியோர் வேண்டிய ஒழுங்குகளைச் செய்யவும் ஆரம்பித்த வேளையில் கூட்டணித் தலைமைப்பீடத்தின் சூசகமான ஆலோசனையின் பேரில் திருச்சபை பகிரங்க மரணக் கொண்டாட்டம் வேண்டாம் என அறிவித்ததாம். இன்றைய சூழ்நிலையில் ஈழவேந்தன் போன்ற எதிர்ப்பாளரும் வேறு சில கத்தோலிக்க தீவிரவாதிகளும் கூட்டணித் தலைமைக்கு எதிராக இதனைப் பயன்படுத்தக் கூடும் என்ற அச்சமே இதற்கு அடிப்படைக் காரணமாம். எனினும் தலைமையின் இரகசிய ஏற்பாட்டின்படி தேவாலய வளவில் வைத்து அமிர்தலிங்கமும், ஏனைய கூட்டணிப் பிரமுகர்களும ''வெற்றிகரமாக'' இரங்கலுரை நிகழ்த்தி தப்பித்துக் கொண்டனர்.

**ஆட்களை மாற்றுவதால் பிரச்சினைகள் தீரமாட்டா; அமைப்பை மாற்றுவதே வழி!**

# மாவட்ட அ. சபையுடன் மறைந்தது தமிழ்ஈழமாயை!

ஜே. ஆர். அரசாங்கத்தின் நிர்வாகத்தைப் பரவலாக்கும் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மசோதா பாராளுமன்றத்தில் தமிழர் கூட்டணியினரின் முழு ஆதரவோடு நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழர் கூட்டணி யூ. என். பி. யுடனான தனது 'வர்க்கப் பிணைப்பை' பகிரங்கமாகவே ஒப்புக்கொண்டுள்ளது. எப்பொழுதும் பகிரங்கமாகவும் சில வேளைகளில் இரகசியமாகவும் இருந்து வந்த யூ. என் பி—கூட்டணி (தமிழ்த் தலைவர்கள்) வர்க்க உறவையிட்டு நாம் எப்பொழுதும் சரியாகவே சொல்லி வந்தபடியால் எமக்கு இது ஒரு அதிசயச் சம்பவம் அல்ல. நாம் சுட்டிக்காட்ட விரும்புவது தமிழ்மக்களும் — இளைஞர்களும் கூட்டணித் தலைமையால் ஏமாற்றப்பட்டு 'நடு வீதியில' நிறுத்தப்பட்டுள்ள நிலையையேயாகும்.

தமிழ் ஈழக்கோரிக்கையைக் கூட்டணி என்று தம்மைக் கூறிக்கொண்ட தலைவர்கள் மிக உச்சக் குரலில் ஒலிக்கத் தொடங்கியபோதே அதன் தவறான தன்மைபற்றியும், இக்கோஷத்தை இத் தலைவர்கள் தமது 'அரசியல் பிழைப்பு' க்குப் பாவித்துச் சாதாரண தமிழ் மக்களை இளைஞர்களை ஏமாற்றப் போகின்றார்கள் என்பதையும், நாம் மீண்டும் மீண்டும் எடுத்துரைத்தபோது சிலர் எமது தர்க்கரீதியான நியாயங்களை ஏற்க மறுத்து 'ஆ... ஊ..!' என்று அலறித் துள்ளினர்.

ஆனால் இன்று நடந்திருப்பது என்ன? "அடைந்தால் தமிழ்நாடு இன்றேல் பிணக்காடு" என்ற தலைவர்கள் மாவட்ட அபிவிருத்திச் சபை 'மண் அணை என்ற மாருட்ட நியாயங்கள் பேசி வருகின்றனர். தான் எதைக் கூறினாலும் தமிழ் இளைஞர்கள் — தமிழ்மக்கள் மறுப்பு நியாயம் இன்றி எதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நினைப்பிலேயே கூட்டணியில செயலாளர் நாயகம் பேசிவருகின்றார். அவர் இளைஞர்களைத் தாக்கும் விதத்திலேயே அவரது திமிர்த்தனம் வெளிப்படுகின்றது. அமிர்தலிங்கம் தமிழுக்காக எதையெதையோ எல்லாம் இழந்துவிட்டதாகவும் அவர் ஒரு தியாகி என்றும், அதனால் அவர் சொல்லும் சகலதையும் ஏற்றுக்கொள்ளும்படியும் அண்மையில் வட்டுக்கோட்டை எம். பி. பேசியிருக்கிறார். வட்டுக்கோட்டை எம். பி. க்கு அமிர்தலிங்கம் தியாகிதான். ஏனெனில் தன்தொகுதியை "தியாகம்" செய்து காங்கேசன்துறைத் தொகுதிக்குச் சென்றவரல்லவா அமிர்தலிங்கம். ஆனால் தமிழ் மக்களுக்காக அமிர்தலிங்கம் செய்த தியாகம்தான் என்னவென்று எவருக்குமே விளங்கவில்லை. தமிழ்ஈழத்தை அமைக்க "வெளவால்" வரும் என்றுபேசித் திரிந்த வண்ணை ஆனந்தன் இன்று அமிர்தலிங்கம் 35 இலட்சம் தமிழ்மக்களின் ஏகத்தலைவன் என்று அமிர்தலிங்கத்திற்குச் 'சாமரை' வீசுவது எதிர்வரும் மாவட்டசபைத் தேர்தலுக்குத்தான் என்பதைத் தமிழ் மக்கள் விளங்கிக் கொள்ள முடியாத ஒன்றல்ல. நாம் அந்த வெள்வால் ஆனந்தனிடம் கேட்கவிரும்புவது, யார் அந்த 35 இலட்சம் தமிழர்கள் என்பதுதான். தயவு செய்து கணக்குப்போட்டுச் சொன்னால் நாங்களும் விளங்கிக்கொள்ள சற்று உதவியாக இருக்கும் அல்லவா? ஏன் ஏமாற்றுகிறீர்கள்? இன்னுமா தமிழ் மக்களை ஏக முட்டாள்கள் என்று நினைக்கின்றீர்கள்? அந்தகாலம் இன்று மலையேறிக்கொண்டு வருகின்றது. உங்களது ஐம்பம் தமிழ் மக்கள் — இளைஞர்கள் மத்தியில் பலிக்காது என்றே கூறுகின்றோம்.

கூட்டணித் தலைமையையும் அமிர்தலிங்கத்தையும் நாம் குறிப்பிடும்போது அவர்கள் மாவட்ட அபிவிருத்திச் சபைகளைஏற்றுக்கொண்டதற்காகவே அல்லது தமிழீழக் கோரிக்கையை கைவிட்டதற்காகவோ மட்டும் நாம்கண்டிக்கவில்லை; அவர்களது வர்க்கநிலைப்பாட்டையும், கைவந்த ஏமாற்றுக் கலையையுமே அம்பலமாக்கின்றோம். இன்று கூட்டணித் தலைமையைத் கிட்டித் திர்த்துவரும் ஈழவேந்தன் — கோவை மகேசன் போன்றவர்கள் குறைந்தவர்கள் அல்லர்; அவர்களும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே. அவர்கள் அமிர்தலிங்கத்தை அமெரிக்கா விலைக்கு வாங்கிவிட்டதாக பெரும் ஓலம் வைக்கின்றனர். இவர்களை நோக்கு சோவியத் சமூக ஏகாதிபத்தியம் விலைக்குவாங்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்.

தமிழ் மக்களும் தமிழ் இளைஞர்களும் தமிழர் கூட்டணியின் உண்மைத் தோற்றத்தை நன்கு கண்டுகொண்டுள்ள இவ்வேளை கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் ஒரு சரியான நோக்கில் கண்டுகொள்வது அவசியம். தமிழ்ஈழக் கோரிக்கையை உச்சரிப்பதனால் மட்டும் கூட்டணிக்கு எதிரானவர்கள் எல்லோரும் தமிழ்மக்களுக்கு விமோசனம் காட்டுவார்கள் என நம்புவது தவறு. தமிழ் ஈழக் கோரிக்கை அடிப்படையில் தவறானது; அதை முதியவர்களாயினும்சரி, இளைஞர்களாயினும்சரி எவர் முன்வைத்தாலும் தவறு தவறேதான். முழுத் தமிழ் மக்களையும் முழுத் தேசத்தையும் உண்மையாகவே விடுதலை செய்யக்கக்கூடிய ஒருஉயர்ந்த இலட்சியப் பாதையைப் பற்றி மிக ஆழமாகவும், நிதானத்துடனும் சுயநலம் இன்றியும் முன்னெடுக்கும் வழிவகைகளைப் பற்றி ஆராய்ந்து முடிவுக்கு வரமுயல்வதே தமிழ் மக்கள் மத்தியிலுள்ள நியாயசிந்தை உள்ள சக்திகளின் கடமையாகும்.

## "சோஸலிச முதலாளியின்" சுயரூபம்!

யாழ். நகரில் உள்ள பிரபல கரேஜ் முதலாயிடம் சம்பள உயர்வு கேட்டு அவரது தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அண்மையில் ஒரு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரிக்கைக்கு அந்த முதலாளி கொடுத்த பதில்: "தனக்கு தொழிற்சாலையில் நஷ்டமே தவிர இலாபம் இல்லை" என்பதாகும். இந்த பதிலைத்தான் உலகம் முழுவதிலும் சம்பள உயர்வு கேட்கும் தொழிலாளர்களுக்கு முதலாளிகள் கூறும் வழமையான பதிலாகும். ஆனால் உண்மை அப்படியல்ல என்பதை நூற்றாண்டுகளுக்கு முன் மாபெரும் மாக்சிசம் அடித்துக்கூறிவிட்டது. இதில் சிரிப்பிற்கிடமானது என்னவென்றால், இந்த முதலாளி மாக்சிசம் பேசும் ஒரு 'சோஷலிச முதலாளி' என்று அவரது கோஷ்டியினரால் புகழப்படுபவர் என்பதுதான். தனக்கு நஷ்டம் என்று சொல்லி இந்த முதலாளி தொழிலாளர்களை ஏமாற்றப் பார்க்கின்றார். அதாவது அவரது தொழிற்சாலையில் ஐந்துக்கு மேற்பட்ட 'லேத்' மெசின்கள் உண்டு; ஒவ்வொரு லேத் இயந்திரமும் காலை எட்டுமணி தொடக்கம் மாலை ஆறுமணிவரை வேலை செய்தால் குறைந்தது 500 ரூபாவையும் கூடியது 1000 ரூபாவையும் சம்பாதிக்க முடியும். அவ்வாறே சம்பாதிக்கின்றார் அந்த முதலாளி. சுருங்கக்கூறின் ஒரு லேத் இயந்திரத்தின் மூலம் ஒருநாளைக்குச் சம்பாதிப்பதைவிட குறைவான சம்பளத்தையே ஒரு லேத் இயந்திரத்தை இயக்கும் தொழிலாளி ஒரு மாதச் சம்பளமாகப் பெறுகிறான். அதை மேலும் மாக்சிஸ அடிப்படையில் கூறுவதாயின் ஒரு தொழிலாளி ஒரு மாதத்தில் ஒருநாளைக்கு மட்டுமே தனக்காக உழைக்கின்றான். மிகுதி 29, 30 நாட்களிலும் மூலதனத்தையிட்ட

(6-ம் பக்கம் பார்க்க)

# ஆக்கிரமிப்புக்கு துதி பாடிவரும் இந்தியா

வஞ்சம் நிறைந்த உலகம் இது. உலகில் முதல்முதலாக சோஷலிசத்தை நிர்மாணித்த சோவியத்யூனியன் இன்று மிகக் கொடூரமான இறுமாப்புள்ள ஏகாதிபத்தியமாக மாறிவிட்டது. ஏகாதிபத்தியத்தின் குரங்குப் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட முதலாவது லத்தீன் அமெரிக்க நாடான கியூபா தென்கிழக்கு அமெரிக்காவில் சுதந்திரத் தீயை மூட்டிவிட்ட கியூபா, இன்று ஆபிரிக்காவில் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் கைக்கூலியாக மாறிவிட்டது. முப்பது வருட காலமாக வீரப்பிரதாபத்துடன் பிரஞ்சு அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய வியட்நாம் தான் விடுதலையடைந்த மறுகணமே லாவோசையும் கம்பூச்சியாவையும் [illegible]யைப் பற்றி அடிமைப்படுத்த முன்வந்துள்ளது. அணிசேரா இயக்கத்தில் அங்கத்துவம் வகிக்கும், பஞ்சசீலக்கொள்கையை உருவாக்கிய நாடுகளில் ஒன்றான இந்தியா இன்று வியட்னாம் கம்பூச்சியா மீது நடாத்திய ஆக்கிரமிப்பை ஆதரிக்கின்றது.

**நேரகாலம்**

இந்திய அரசாங்கம் கம்பூச்சியாவில் உள்ள வியட்நாமின் கைப்பொம்மையான ஹெங்சமரின் உடைபொம்மை ஆட்சியை அங்கீகரித்த செயல் தென்கிழக்காசிய நாடுகள் மத்தியில் பெரும் ஆச்சரியத்தையும், ஆத்திரத்தையும், அருவருப்பையும், உலகம் முழுவதிலும் வெறுப்புணர்ச்சியையும் தூண்டிவிட்டுள்ளது. இந்தியா இதற்குத் தேர்ந்தெடுத்த வேளை இப்பரபரப்புக்குக் காரணமாகும். வியட்னாமியர்கள் தாய்லாந்தை ஆக்கிரமித்து நூற்றுக்கணக்கான தாய்லாந்து மக்கள் உயிரிழந்தும் எல்லைப் பகுதியில் பல கிராமங்கள் அழிக்கப்பட்ட வேளையில், உலகனைத்திலும் கோபத்தையும் எதிர்ப்பையும் உருவாக்கி மூன்றும் உலக நாடுகளில் இருந்து வியட்நாம் தனிமைப்பட்டுள்ளது. ஆசிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கோலாலம்பூரில் கூடி கம்பூச்சியாவிலிருந்து வியட்நாமிய துருப்புக்களை வெளியேறச் செய்யும் முயற்சிகள் பற்றி ஆராய்கின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழு ஜனநாயக கம்பூச்சிய அரசாங்கம் தொடர்ந்தும் ஐ. நா. வில் அங்கம் வகிக்கவேண்டும் என்ற கோரிக்கையை ஆராயக்கூடியது. (இக்கோரிக்கை ஆமோதிக்கப்பட்டு பொதுச்சபையால் அங்கீகரிக்கப்பட்டது) வியட்நாமினதும் அதன் மேலாதிக்க எஜமான் சோவியத் யூனியனும் செல்வாக்குச் சீரழிந்த நிலையிலுள்ள வேளையில் - மேலாதிக்க கூட்டணியின் மனமுடைந்த நிலையில் கைதூக்கி உதவ இந்தியா முன்வந்துள்ளது. சோவியத் யூனியனுக்கு, வியட்னாமுக்கு இதைவிட சிறந்தமுறையில் எந்த நாடும் உதவியிருக்க முடியாது.

**சுதந்திரமும் சுயாதிபத்தியமும்**

சுதந்திரத்திற்கும் சுயாதிபத்தியத்திற்கும் இருநூறு வருட பெருமைமிக்க போராட்டப் பாரம்பரியத்தைக்

**ஜாக்**

கொண்ட நாடு இந்தியா. இம்மகத்தான போராட்டம் உலக மக்கள் அனைவரையும் உணர்ச்சிவயப்படுத்தி இந்தியாவின்மீது ஓர் அபிமானத்தை ஏற்படுத்தியது; இந்தியாவின் போராட்டத்திற்கு உலக மக்கள் அளித்த ஆதரவும் அபிமானமும் இன்று இந்தியாவை ஏகாதிபத்திய ஆதிக்கத்தை ஆதரிக்கச்செய்துள்ளது என்றால் இதைவிட வஞ்சம் வேறு ஏதுமில்லை. நாசகார மூன்றாவது உலகமாக யுத்தத்தைத் தடுக்கக்கூடிய ஒரேயொரு மார்க்கம் பெரியதோ சிறியதோ எந்தவொரு நாட்டின் சுதந்திரத்தையும் சுயாதிபத்தியத்தையும் பறிக்க ஏகாதிபத்தியம் எடுக்கும் சகல முயற்சிகளையும் எதிர்ப்பதுதான் என்பது மென்மேலும் தெளிவாகி வருகின்றது. ஆப்கானிஸ்தானின் ஆக்கிரமிப்பு ஆக்கிரமிப்பாளனை இந்தியாவின் வாசலுக்கே கொண்டுவந்துவிட்டது. இதன் அபாயத்தை இந்தியா நிச்சயம் உணர்ந்திருக்கவேண்டும். அதன் தலைவர்கள் உணராதிருப்பது துரதிஷ்டமானதாகும்.

**பணமே சகல நாசத்திற்கும் காரணம்**

இந்தியாவுக்கும் சோவியத்யூனியனுக்கும் இடையில் ஏற்பட்ட பரஸ்பர நட்புறவு ஒப்பந்தமும், சோவியத்யூனியனிடமிருந்து இந்தியா பெறும் பெருமளவிலான ஆயுத உதவி இந்தியாவை இந்நிலைக்குத் தள்ளியுள்ளது போலும். இது மிகவும் அபாயமான நிலை. சோவியத் யூனியன் உலகம் முழுவதையும் ஆதிக்கம் செய்யும் அபிலாசை கொண்டுள்ளது. தனது ஆசையை நிறைவேற்ற அது உலகின் சகல பாகங்களிலும் அடிவருடும் நண்பர்களை விலைக்கு வாங்குகின்றது. மாபெரும் 'உதவி' யை அள்ளிக் கொட்டுதன் மூலம் தனது கீழ்த்தரவேலையைச் செய்ய ஆள்சேர்க்கிறது. பெருந்தொகையான பணம் கியூபாமீது கொட்டப்படுகின்றது. அதன்மூலம் சோவியத்யூனியன் கியூபா மூலமாக தென்னமெரிக்க நடவடிக்கைகளில் கைபோடவும் ஆபிரிக்காவில் தனது கீழ்த்தர காரியங்களைச் செய்விக்க பாவிக்கிறது. தென்கிழக்காசியாவில் தூரகிழக்கு நாடுகளில் வியட்னாம் சோவியத் ஏஜன்டாகச் செயல்படுகின்றது. இதேபோல் பாகிஸ்தான், வங்காளதேசம், நேபாளம், பர்மா, இலங்கை ஆகிய நாடுகளை சோவியத் வலைக்குள் சிக்க வைக்க இன்று இந்தியா விலைக்கு வாங்கப்படுகின்றது.

—நன்றி: 'ரெட் பனர்'

உண்மைகள் மறைக்கப்படமுடியாதவை; உயர்ந்த லட்சியங்கள் தோற்கடிக்கப்படமுடியாதவை

# உள்ளூர் உற்பத்தித்துறைகள்மூடப்பட்டுள்ளன

# தொழில் வாய்ப்பும் வீழ்ச்சியடைந்துள்ளது!

**கடந்த இதழில் வெளிவந்த பொருளாதாரக் கட்டுரையின் அடுத்த பகுதி இதுவாகும்.** (ஆ.கு.)

## கோமதியன்

இலங்கையில் பொருட்பற்றாக்குறை இருப்பதாற்றான் பணவீக்கம் உருவாகிறதென்பதால் அதை அகற்ற இறக்குமதி உயர்த்தப்படவேண்டும். உள்நாட்டு உற்பத்தி வேகமாக அதிகரிக்க முடியாதிருப்பதால் இறக்குமதியை தாராளமாக்கி நிரம்பலைக் கூட்டி விலைகளைக் குறைக்கலாம் என கோட்பாட்டு விளக்கப்படி கருதப்பட்டது. ஆனால் பணவீக்கம் என்பது அத்தியாவசியப் பண்டங்கள் சேவைகளின் விலைகளில் ஏற்படும் உயர்ச்சியேயாகும். அரசாங்க தனியார் துறையில் அத்தியாவசிய பண்டங்களை மட்டுமே இறக்குமதி செய்வர் என எதிர்பார்க்க முடியாது. அவர்கள் ஆடம்பரக் கைத்தொழில் பண்டங்களையே அதிகம் இறக்குமதி செய்கின்றனர். இதனால் அவசியமான கூலிப் பண்டங்களின் விலை குறையவேண்டியதில்லையே. அத்துடன் அரசின் நாணயமதிப்பிறக்கம் இறக்குமதி விலைகளை இருமடங்கு உயர்த்தியதால் இறக்குமதி செய்து விற்பது அதிக இலாபம் தராது என்பதாலும் அப்பண்டங்களின் விலைகள்மீது கட்டுப்பாடுகளிருப்பதாலும் இவற்றில் இறக்குமதி பெருகுவதில்லை. உணவுப் பண்டங்களிலும்கூட ஆடம்பர இறக்குமதிகளே தனியாரால் அதிகம் இறக்குமதியாகின் அப்பிள், கோழி, தகரத்திலடைத்த பன்றியிறைச்சி, மீன் போன்றன அதிக விலைக்கு செல்வந்தருக்கு விற்கக்கூடியன. இவற்றின் இறக்குமதி சாதாரண மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்காது. தாராளமாக்கலினால் தனியார் துறையில் நிறைபோட்டி ஏற்பட்டுக் கள்ளச்சந்தை ஒழிந்து விலை குறையும் எனப்படுகின்றது. ஆனால் உண்மையில் அரசு சமூகநலன் கருதி நுகர்வோன் பாதுகாப்புச் சட்டத்தை கொண்டுவந்திருப்பதோடு பலபண்ட விநியோகத்தில் அரசு போட்டியிடுவதால் தனியார் ஊக்கம் குறைகின்றது. அத்துடன் மல்லி, தீப்பெட்டி, செத்தல் மிளகாய் போன்ற பலவற்றில் இருப்பு வைக்கும் கொள்கையையும் அரசு பின்பற்றி வருகின்றது. இவ்வகையில் தனியார் உத்தேச இருப்புக் கொள்கை பாதிக்கப்படும் என்பதால் அவர்கள் வியாபார ஊக்கம் குறைந்து போகும். இவை தனியார் நிறைபோட்டி வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும். விலைக்கட்டுப்பாடு மக்கள் நோக்கில் மிக அவசியம். ஆனால் அத்தகைய தீவிர நடைமுறைகள் பொருட்பதுக்கலுக்கு தொடர்ந்து காரணமாக இருக்கும் என்பதும், இதனால் விலையுயர்வு உடனடியாகக் குறைபமாட்டாது என்பதையும் கவனித்தல்வேண்டும். கட்டுப்பாட்டு விலை சந்தையின் கேள்வி நிரம்பலால் நிர்ணயமாகும் விலையைவிடக் குறைவாக இருக்க வேண்டும். ஆனால் சீனியின் விலையுயர்வு மண்ணெண்ணெயின் விலையுயர்வு அரசினுடைய தீர்மானிக்கப்படும் போதுகட்டுப்பாட்டு விலையின் நடைமுறை நன்மைகள் அற்றுப் போய்விடுகின்றன. அரசின் சீனி விலையுயர்வு அண்மைக்கால விலைமட்ட உயர்வில் முக்கிய பங்குவகிப்பது குறிப்பிடத்தக்கது. அரசின் தீர்வை சலுகைகள் பணவீக்கத்தை நிச்சயம் குறைக்கும் எனக் கருதமுடியாது. பக்கவின் சிவாதாரப் பண்டங்களின் விலைகளைக் குறைக்கத்தக்க தீர்வைச் சலுகைகளை அரசு அதிகம் அதிகரிப்பதாக இல்லை. மண்ணெண்ணெய் விலை உயர்த்தப்படும்போது (Gas Cooker) வாயு அடுப்புமீதான தீர்வை 50 வீதத்லிருந்து 5 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதில் முடக்கும் மூலதனமுடையோர் எத்தனை வீதத்தினராய் இருப்பர் என்பதை மனங்கொள்ள வேண்டும். தொலைக் காட்சிப் பெட்டி, உபகரணங்கள் மீதான தீர்வை 50 வீதத்திலிருந்து பன்னிரண்டரை வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதற்கும் பணவீக்கக் குறைப்புக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அண்மைக் காலத்தில் அரசின் தாராள இறக்குமதிக் கொள்கையினால் விலை மட்டம் குறைதற்கு மாறாக உயர்ந்திருப்பது கவனிக்கத்தக்கது. 1977 இல் 203·2ல் கொழும்பு நுகர்வோர் விலைக் குறிகாட்டு 1979 டிசம்பரில் 274·4 ஆகக் கூடியிருந்தது. இதன் கணிப்பில் உணவுப் பொருட்களின் விலைச் சுட்டெண் உயர்வு இதே காலத்தில் முறையே 203·3 இல் இருந்து 286·8 ஆக கூடியுள்ளது. துறைவழிடிப்படையில் இறக்குமதிததுறைக்கான குறிகாட்டி குறையவில்லை. மாறாக அது இக்காலப் பகுதியில் 195·6 இலிருந்து 328·1 ஆக கூடியுள்ளது. மத்திய வங்கியால் 1974 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படும் மொத்தவிலை சுட்டெண்ணையும் இத்துடன் இணைத்துப் பார்ப்பது உபயோகமானது. 1977இல் 135·3 இலிருந்த குறிகாட்டி 1979 டிசம்பரில் 191·8 ஆக கூடியுள்ளது. எல்லா மக்களுடனும் தவிர்க்க முடியாத தொடர்பு கொள்ளும் உணவுக்கான இச்சுட்டெண் முறையே 140·8 இலிருந்து 179·5 ஆகக் கூடியுள்ளது. இறக்குமதித் துறையில் இது 93லிருந்து 183·8 ஆக கூடியுள்ளது. நுகர்வோன் பண்டங்களின் இந்த விலை 140·7 இலிருந்து 186·3 ஆகக் கூடியிருப்பதையும் மனதிற்கொண்டால் தாராள இறக்குமதியால் பணவீக்கம் குறைந்தது அல்லது எதிர்காலத்தில் மேலும் குறையும் என எதிர்பார்ப்பதற்கு எவ்வித அடையாளங்களும் இல்லை என்பதை உணரலாம். அரசினது வேகப்படுத்தப்பட்ட மகாவலித் திட்டத்தினூடாகவும் வருடாந்தம் 10 மில்லியன் ரூபாவுக்கு மேலாக பணம் நாட்டில் பாய்ச்சப்படுகிறது. ஆனால் அந்தளவு வேகத்தில் உற்பத்திப் பெருக்கம் இலங்கையில் ஏற்பட முடியாது. இந்நிலை பண அளவு கூடுவதுடன் இணைந்து விலைமட்டங்கள் உயர்வது தவிர்க்க முடியாததாகிவிடும். விலை மட்டத்தைக் குறைக்கவேண்டும் என்று மேற்கொண்ட நடவடிக்கைகளின் பாரிய முயற்சிபொன்று மீண்டும் பணவீக்கத்தைத் தூண்டுவது முதலாளித்துவ பொருளாதாரக் கோட்பாடுகளில் தஞ்சம்புகுவோர்எதிர்பார்க்க வேண்டியதே.

தனியார் முயற்சியை மிகுதியாக நம்பியிருப்பது அரசின் ஒரு கொள்கையாகவுள்ளது. தனியார் முயற்சிக்கு ஊக்கம் அளிக்க விலையுயர்வு கட்டாய தேவை. உள்நாட்டு தனியார் முயற்சியை மட்டுமன்றி அந்நிய முதலீட்டாளரையும் அதிகம் வரவேற்பதால் விலைமட்டத்தை குறைக்கும் முயற்சிகளை அரசு அதிகம் விரும்பாது. இதற்கு மாறாக அதன் பாதிப்புக்கு பொதுமககள் உட்படாதிருக்க அவர்கட்கு இடையிடை சம்பளவுயர்வு வாழ்க்கைப்படி உயர்வு என்பன வழங்கப்படும். இத்தகைய வருமான உயர்வு வெறுமனே பண வருமானத்தின் அதிகரிப்புத்தான். ஏனெனில் விலையுயர்வு மீண்டும் விலையுயர்விலேயே போய் முடியும். இந்த தொடர் விளைவுகளையெல்லாம் தட்டிவிட்டு வீக்கத்தைக் குறைத்துவிடலாம் என்பதும் வெறும் பேச்சாகவே இருக்கும்.

### செலாவணி

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கான மற்றொரு தேவை இயன்றளவு செலாவணி உழைத்தல். இதனால் அதிகளவு செலாவணி சம்பாதிக்க பல வழிகளை இன்றைய அரசு சிபார்சு செய்து நடைமுறைப் படுத்தி வருகிறது. முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் ஏற்றுமதி உழைப்பு தொடர்பில் முதன்மையானது. இறக்குமதியைக் குறைத்து செலாவணி சேமித்தல் என்றவகையில் மகாவலி துரிதப்படுத்தும் திட்டம் முதன்மையானது. உள்நாட்டில் தனியார்துறை ஏற்றுமதியைக் கூட்டி அதில் செலாவணி வருவாயை உழைத்தல் என்பதும் பிரதான நோக்கமாகும்: ஏற்றுமதித்துறை சார்ந்த மூலப்பொருட்கள் நடுத்தரப் பொருட்கள்பேன்றனவற்றின் இறக்குமதியைத் தாராளமாக அனுமதிக்காது அவற்றிற்கு வேண்டியளவு செலாவணி பெறவும் அங்கீகாரம் அளித்துள்ளது. இதனால் நடுத்தரப் பொருட்கள் இறக்குமதி கூடியிருப்பது உண்மையே. 1978 இல் மொத்த இறக்குமதியில் 38 வீதமாகவிருந்த இவற்றின் இறக்குமதி 1979இல் 4 வீதமாக உயர்ந்த மூலதனப் பொருட்களின் இறக்குமதியும் முறையே 13. 24 வீதமாக காணப்பட்டன. ஆனால் இந்த இறக்குமதி அதிகரிப்பு இறக்குமதிச் செலவினங்களை கூட்டியபோது அதை ஈடு செய்யத்தக்க ஏற்றுமதி வருவாய்கள் கூடினவா என்பது பிரதான கேள்வியே. உண்மையில் உள்ளூர் உற்பத்தி பிடவை உற்பத்தித் துறையில் வீழ்ச்சியடைந்தபோது அவற்றின் இறக்குமதிதேவையற்றளவு பெருகி கடைகளில் குவிந்தது. 1978இல் 481 மில்லியன் இதன் இறக்குமதிக்காக செலவிடப்பட்டிருந்தது. ஆனால் 1979 இல் இது 1108 மில்லியனுக பெருகியது. இதற்கும் நாட்டின் உற்பத்திக்கும் என்ன தொர்பு? நாணய மதிப்பிறக்க செயல் இவற்றின் விலைகளை உயர்த்தியதோடு வியாபாரிகளின் இலாபவெறியும் இத்துடன் இணைந்து மக்களிடமிருந்து பணத்தைப் பறித்தன.

இந்த அரசாங்க காலத்தில் 1977 இல் 6007 மில்லியனுக இருந்த இறக்குமதிச் செலவு 1979இல் 22, 506 மில்லியனுகப் பெருகிற்று. இந்த இறக்குமதி நாட்டிற்கு எவ்வகையில் செலாவணி உழைப்பைந் தூண்டி உதவியது என்பதே கட்டாய கேள்வியாகும். 1977 இல் 6638 m ஆக இருந் ஏற்றுமதி வருமானம் 1979இல் 15,273 m ஆகவே இருந்தது. இந்த இடைவெளி — வர்த்தக மீதி — இக்காலப் பகுதிகளில் 1977 இல் 63 மில்லியன் சாதகமாயிருந்த ற்கு மாறாக 1979 இல் 7281 மில்லியன் பாதகமாகவே இருந்தது

மோட்டார் சைக்கிள்கள் மீதான தீர்வை விலக்கு மத்தியதர மட்டத்தினருக்கான சலுகை மட்டுமே: இதேயளவு செலாவணிகளைப் பதப்படுத்த பஸ்வண்டிகளின் இறக்குமதிக்கு வழிப்படுத்தியிருக்கலாம். அதேசமயம் தனியார் சேவை, ஒழுங்கு, கட்டணம், வேலைமுறை என்பவற்றினது தீவிரக்கட்டுப்பாடுகளை அரசு மேற்கொள்ளவேண்டும். இதைச் செய்யத் தயங்கும் பட்சத்தில் இவை தர்க்கமுள்ள தேசிய நலன்சார் நடவடிக்கைகள் ஆகமாட்டா. தனியார்லொறி வான், ஆகியவற்றிற்கு தீர்வை அரசாங்கம் 5 வீதத்திற்த இறக்குமதித் தீர்வையைக் குறைத்திருப்பது அங்கேதான் பயனுடையன.

சுதந்திரவலய ஏற்றுமதிகள் ஒரு கைத்தொழில் வலயமாகவே இல்லை. அரசின் பிரச்சாரங்களுக்கு ஏற்ப விளைவுகள் தீவிரமாயில்லை. 1979ன் இவ்வலய மொத்த ஏற்றுமதி - 115m இருக்கும். இதில் தைக்கப்பட்ட உடைகளின் பெறுமானமே 107m ஆகும். 1979 வரை - 13கைத்தொழில் நிறுவனங்கள் இயங்கின. இத்திறவலவலயத்தின் ஏற்றுமதி 111 m ஆனால் இதன் இறக்குமதித் தாக்கம் மிக அதிகம் என்பதால் தேறிய விளைவு திருப்தியற்றது. பெரும்பாலான நிறுவனங்கள் உடை தயாரிக்கும் தொழிலிலேயே ஈடுபடுவதால் எதிர்காலத்தில் அதிலும் ஏற்றுமதிப் பிரச்சினைகள் ஏற்படும் என்ற பயத்தில் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு, அத்தகைய கைத்தொழில்களை அதிகரிக்க வேண்டாம் என ஆலோசனையும் கூறி வருவதையும் மனங்கொள்ள வேண்டும். முன்னமிர்தால் குறிப்பிடுவதுபோல வறிய நாடுகள் பிடவைக் கைத்தொழிலில்தான் கவனம் செலுத்த முடியும். கைத்தொழில் நாடுகளுடன் போட்டியிடாதவாறு முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் வளர முயற்சிப்பது ஒரு ஆரோக்கியமற்ற வளர்ச்சி மட்டுமே. உலகின் சுரண்டலில் பேர்போன பலதேசியக் கூட்டுத்தாபனங்களின் அசுர நுழைவு இலங்கையின் செலவாணி வருவாய்களை மாத்திரம் உயர்த்திவிடும் என நம்பினால் அது கடந்த பிற நாடுகளின் அனுபவப் பார்வையில்லாத வெற்று எதிர்பார்க்கையாகவேஇருக்க முடியும். கனனிகள் மின்பொறிகளின் ஆக்கமும்தேசிய சந்தைகளுக்கான இவற்றின் நுழைவும் வேலையற்ற பட்டாளத்தை மேலும் பெருக்கி முதலாளிகள் தாம் விரும்பியபடி கூலிகளைக் குறைக்கவும் உதவியாகவே இருக்கும். முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் என்ன இலங்கையின் முதலாவது வலயமா? அல்லது முதலீட்டாளர்கள் ஏமாளிகளா? இலாப இலக்கை மனதில் கொண்டு பேயாக அலைந்து தமது மூலதனத்தை இடம்பெயர்க்கும் முதலாளித்துவ நிறுவனங்களின் உதவியோடு இலங்கை தன் செலாவணிப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள நினைக்கும் துணிவு நம்பிக்கை தரத்தக்கதா?

மகாவலித் திட்டத்தை தீவிரப்படுத்தவும் தேவையானவற்றைத் தாராளமாக இறக்கிக்கொள்ளவும் இக்கொள்கை உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1981 இல் நெல் உற்பத்தியில் தன்னிறைவு பெற 11 கோடியே 60 இலட்சம் புசல் நெல் தேவை. மாவலித் திட்டத்தில் அரசின் செலாவணிக் குவிப்பு விக்ரோறியா, கொத்மலை அணைக்கட்டுடன் முடிந்துபோய்விடுமா? திட்ட நடைமுறைகளுக்கேற்ற மூல பொருட்கள், கட்டடப் பொருட்கள் என்பனவற்றின் விநியோகம் சீரற்ற நிலையில் சாதனை நிச்சயமாகுமா? சுவீடன், பிரிட்டன், கனடா, ஜப்பான், மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளின் உதவித் திட்டத்தின் செலாவணி வருகை குறைந்த 15வீத மேலதிக விலை உயர்வுக்குக் காரணமாகிவிடும் 1977ல் மாதாந்த சராசரி பணநிரம்பல் 4864 மில்லியனுகவிருக்க 1979 இல் 6846 m ஆகக் கூடியிருப்பது பணவீக்கத்தை தீவிரப்படுத்திவிட்டது. 1978 இல் மாதாந்த சராசரி அதி

(6-ம் பக்கம் பார்க்க)

**முதலாளித்துவ பொருளாதாரத்தின் தவிர்க்கமுடியாத விளைவே பணவீக்கம்!**

# உலக அரங்கில் — அங்கும் இங்கும்

## சிஹானுக்கின் நேர்மையான வேண்டுகோள்

சமீப காலமாக முன்னாள் கம்பூச்சிய தலைவர் — இளவரசர் சிஹானுக்குறித்து பலவிதமான செய்திகள் வெளிவந்தன. பொல்பொற் தலைமைதாங்கும கம்பூச்சிய ஜனநாயக அரசாங்கத்தையும், தேசியவிடுதலை இயக்கத்தையும் சிஹானுக் கண்டித்தார் என்றும் செய்திகள் வெளிவந்தன. அவை எவ்வாறிருப்பினும் சிஹானுக் தமது தேசபக்தியில் எள்ளளவும் குறைந்தவரல்ல என்பதையும் தான் நாட்டின் நல்வாழ்விற்காக உழைப்பதைக் கைவிடவில்லை என்பதையும் சமீபித்து அறிக்கை ஒன்று சந்தேகத்துககு இடமின்றித் தெளிவாக்கிறது.

அண்மையில் ஐ. நா.விற்கு அவர் விடுத்த உணர்ச்சி நிறைந்த வேண்டுகோளிலே வியத்நாமியரின் கைப்பொம்மையான ஹெங்சமரின் தலைமையிலான ''ஊமை'' அரசாங்கத்தை அங்கீகரிக்க வேண்டாம் என கேட்டிருக்கிறார். வியத்நாமில் காலனித்துவத்தை வன்மையாய்க் கண்டித்துள்ள சிஹானுக் தனது அறிக்கையில், ''எனது நாடு கம்பூச்சியா, இன்று வியத்நாமியரின் ஆக்கிரமிப்புக்கு ஆளாகியிருக்கிறது என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை'' என்று ஆணித்தரமாக குறிப்பிட்டிருக்கிறார். ஹெங்சமரின் கும்பல்பற்றித் தமக்கு எத்தகைய மயக்கமும் இல்லை என்று வெளிப்படையாகக் கூறிய அவர் ''சோவியத் ஏகாதிபத்திய வாதிகளாலும் அவர்களின் கையாட்களான வியத்நாமியராலும் நொம்பென் நகரில் ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஹெங்சமரின் — பென்சொவான் கும்பலை எவ்விதத்திலேனும் ஐ. நா. அங்கீகரிக்கக் கூடாது'' என்று கேட்டுள்ளார்.

அவர் தமது விண்ணப்பத்தில் மேலும் கூறியிருப்பதாவது, ''நொம்பெனிலுள்ள கைப்பொம்மைகள் தமது தாய்நாட்டுக்குத் துரோகம் செய்தவர்களாவர்; கெமர் மக்களுக்கும் மாபெரும்துரோகம் இழைத்தவர்களாவர். அவர்கள் கம்பூச்சியர் எவரையும் பிரதிநிதித்துவப் படுத்துவதாய் கொள்ளமுடியாது. வியத்நாமையும் சோவியத் ஏகாதிபத்தியத்தையும் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடும். ஆனல் நிச்சயமாக கம்பூச்சிய தேசத்தை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. 1955-ம் வருடம் துவக்கம் ஐ. நாவில் அங்கத்துவம் வகித்து வரும் கம்பூச்சியாவிற்கு ஹெங்சமரின் கும்பல் இழிவையும் நாசத்தையுமே உண்டாக்கி வருகின்றனர்''

இவ்வறிக்கையில் இளவரசர் சிஹானுக், லாவோஸ், கம்பூச்சிய ஆகிய இரு நாடுகளிலும் வியத்நாமியரின் ஆதிக்கப்போக்கை அம்பலப்படுத்தி 1970-ம் வருடத்து இந்தோசீன மக்கள் உச்சி மாநாட்டு முடிவுகளுக்கு முற்றிலும் மாறாகவும் விரோதமாகவும் வியத்நாமியர் நடந்து கொள்கின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். சிஹானுக் பற்றி சிற்சில வட்டாரங்களில் தோன்றியிருந்த சந்தேகங்களுக்கு இந்த அறிக்கை முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது.

★ ★

## அமெரிக்க - மேற்கத்திய நாடுகளில் வேலையின்மையும் பணவீக்கமும்

ஜனாதிபதி தேர்தலை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் அமெரிக்கா இப்பொழுது மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்துக்கொண்டிருப்பதைப் பலரும் அறிவர். யுத்தங்களையே பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக நம்பியிருப்பது அமெரிக்கா. ஒருகாலத்தில் அமெரிக்காவே உலகின் தலையாய இராணுவ தளபாடங்களின் விநியோகஸ்தராக இருந்தது. அண்மைக்காலத்தில் சோவியத் யூனியனும் இதில் பங்குபோடத் தொடங்கியமையினலே அமெரிக்காவின் ஏகபோக உரிமைபறிபோயிற்று. அத்துடன் உலகின் பலபகுதிகளில் ஜனநாயக விரோத-சர்வாதிகார - ஆட்சிகளைப பிரமாண்டமான செலவில் தாக்குப் பிடிப்பதிலும் அமெரிக்காவின் தேசிய செல்வம் — அமெரிக்க மக்களின் — பணம் விரயமாகிறது. இலங்கையிலே இன்றைய பாசிஸ்டு ஆட்சி அமெரிக்காவின் புகழைத் தினமும் பாடி கனவுகளில் இலயித்திருக்கல்கூடும். ஆனல் உண்மையில் அமெரிக்காவிலே பெரும் பணவீக்கமும், வேலையில்லாத் திண்டாட்டமும் ஏனைய நெருக்கடிகளும் அதிகரித்து வருவதை அமெரிக்க அரசாங்கமே ஒப்புக்கொண்டிருக்கிறது.

இதே வேளையில் மேற்கு ஐரோப்பாவில் உள்ள பிரதான நாடுகளும் பொருளாதாரப் பிரச்சினைகள் பலவற்றை எதிர்நோக்குகின்றதைப் பலர் அவதானிப்பது இல்லை. பொருள்களை கொள்வனவு செய்வதில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மந்தம்; கைத்தொழில் உற்பத்தியிலே ஸ்தம்பிதநிலை; மோசமடைந்துள்ள வேலையில்லாத் திண்டாட்டம், அதிகரித்துச் செல்லும் பணவீக்கம், வரவு செலவுத்திட்டங்களில் பற்றுக்குறை முதலியன இன்று மேற்கு ஐரோப்பிய நாடுகளைப் பீடித்துள்ள முக்கிய பிரச்சினைகள். இதன் காரணமாகவே பிறநாடுகளிலிருந்து அங்கு வேலைவாய்ப்பு தேடிச் செல்வோருக்குப் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன.

ஒப்புநோக்கில் கவனிக்கும்போது இங்கிலாந்து தேசமே பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது தெளிவாகும். இவ்வருட ஆரம்பத்திலிருந்து இங்கிலாந்திலே உற்பத்தி துறையில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டுவந்துள்ளது. நுகர்வுப் பொருள்கள் இவ்வருடம் 5 சதவீதம் வீழ்ச்சியடைந்தது. கடந்த பத்து ஆண்டு காலத்தில் இதுவே மிகக் கூடுதலான வீழ்ச்சியாகும். சென்ற வருடம் நவம்பர் மாதம்முதல் இந்த மந்த நிலையும் பொருளாதார வீழ்ச்சியும் புலப்படதொடங்கியிருந்தது என்று பொருளாதார அவதானிகள் குறிப்பிடுகின்றனர். மேற்கு ஜேர்மனியிலும், பிரான்சிலும் வீழ்ச்சி குறைந்த வீதம் ஏற்பட்டபோதிலும் பொருளாதாரப் பிரச்சினைகள் இருப்பது வெளிப்படை. இப்பிரச்சினைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதுதொழிலாளர் வர்க்கமாகும் பல தொழிற்சாலைகளில் நூற்றுக் கணக்கிலும், ஆயிரக்கணக்கிலும் தொழிலாளர் வேலை இழந்திருக்கின்றனர். அமெரிக்காவில் மாபெரும் மோட்டார் வாகன உற்பத்திக் கம்பனியான ஜெனரல்மோட்டார்ஸ இரண்டாயிரம் பேருக்குச் சீட்டுக் கிழித்திருக்கின்றது. இங்கிலாந்திலும் அவ்வாறே.

நிலைமையைக் கூர்ந்து ஆராய்ந்த புள்ளிவிபர நிபுணர்கள் கூறுவது உண்மையை உணர்த்துகின்றது. இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் இப்பொழுது இந்நாடுகளில் வேலையில்லா பிரச்சினை உச்ச நிலையை எட்டியுள்ளதாம். உதாரணமாக பிரித்தானியாவிலே பத்து இலட்சத்து எண்ணூற்றேழாயிரம்பேர் (1, 897, 000) சென்ற மாதம் வேலையற்று இருந்தனர். இது 1936ஆம் வருடத்திற்கு பின் ஆகக்கூடிய தொகை என்று கூறப்படுகின்றது. அதைப்போல (தமிழ் ஈழக் கோரிக்கையைக் கைவிட்ட தலைவர்களின் துரோகத்தால் மனமுடைந்து அரசியல் அகதிகளாகத் தஞ்சம் புகுந்த தமிழ் இளைஞர்கள் பலர் போய்ச் சென்றிருக்கும்) பிரான்ஸ் நாட்டிலே வேலையற்றோர் தொகை கடந்த யூன் மாதம் பன்னிரண்டு இலட்சமாக இருந்தது. ஏறத்தாழ ஒவ்வொரு மேற்கு ஐரோப்பிய நாட்டின் கதையும் இப்டித்தான்.

அந்நாடுகளில் நிலைமை கஷ்டமாக இருக்கும் பொழுது இலங்கை அரசாங்கம் குறிப்பாக ஜனாதிபதியும் வர்த்தக அமைச்சரும், நிதியமைச்சரும் அந்த நாடுகளையே தஞ்சம் என்று நம்பியிருப்பது அஞ்ஞானமா அல்லது அப்பட்டமான கபட நாடகமா என்பது சிந்தித்து பார்க்க வேண்டியது. இப்பொழுது இலங்கை போன்ற விதேசியப் பித்துப் பிடித்த நாடுகளுக்கு மேற்கு ஐரோப்பிய நாடுகள் உதவி செய்வதன் அர்த்தம் என்ன? தத்தம் நாடுகளிலே தேங்கிக் கிடக்கும் நுகர்வுப் பொருள்களை — ஜீப் வண்டிகள் முதல் மீன்டப்பாக்கள் வரையில்— கடன் உதவி என்ற போர்வையில் கட்டியடிப்பதுதான் இங்கு இறக்குமதி செய்யும் மொத்த வியாபாரிகளுக்கு இலாபம். எம். பீ. க்களுக்கு சந்தோஷம். ஆனல் நாட்டிலுள்ள சிறு கைத்தொழிலாளர்களுக்கும் மக்களுக்கும் தான் வயிற்றில் அடி.

★ ★

## போலந்து தொழிலாளி வர்க்கமும் சமூக ஏகாதிபத்தியமும்

கடந்த சில காலமாக போலந்து நாட்டிலே நடைபெற்றுவரும் தொழிலாளர் வேலைநிறுத்தங்கள், பல காலமாக அங்கிருந்து வந்த நிலைமைகளின் தருக்கரீதியான வெடிப்புகள் என்பதில் ஐயமில்லை. ஒன்றன்பின் ஒன்றாக போலந்து நாட்டின் பல்வேறு நகரங்களிலே-குறிப்பாக கடற்கரைப் பட்டினங்களிலே — வேலை நிறுத்தங்கள் நிகழ்ந்துள்ளன பஸ் போக்குவரத்து தொழிலாளரிலிருந்து கப்பல் கட்டும் தொழிலாளர்வரை பலதரப்பட்டவர்கள் ஒற்றுமையுடன் வேலைநிறுத்தத்தில் குதித்திருக்கின்றனர். ஆகஸ்ட் மாத பிற்பகுதியில் மட்டும் நூற்றைம்பதினயிரம் தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். சுமார் நூற்றெழுபத்தைந்து நிறுவனங்கள் இதிலே சம்பந்தப்பட்டிருந்தன. லெனின் உருக்கு ஆலையைச் சேர்ந்த கனரக இரும்புத் தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் மும்முரமாக இருந்தனர். கட்சியின் செயலாளர் எட்வர்ட் கியெரெக் நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் உரையாற்றிய பின்னரும் கூட லெனின் உருக்குத் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அரசின் ஆலோசனையை நிராகரித்து விட்டனர்.

வழக்கம்போலவே அரசாங்கம் தொழிலாளர்மீது பலவகையான தேசத்துரோகக் குற்றச்சாட்டுகளை வீசியுள்ளது. ஆயினும் காரணத்தை அறிந்துகொள்வது கடினம அல்ல சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் பொருளாதார பிடிக்குள் — ''பரஸ்பர உதவித் திட்டம்'' என்ற விலங்கில் மாட்டிக் கொண்டுள்ள போலந்து, ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப்போலவே கண்மூடித்தனமான கொள்கைகளை அமுல் நடத்திவந்துள்ளது. ''சோஷலிச நாடுகளுக்குள் வேலைப்பிரிவினை'' என்ற பிரெஷ்னெவ் கோட்பாட்டின்படி போலந்து சிலசில குறிப்பிட்ட துறைகளிலேயே உற்பத்தியை அபிவிருத்தி செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதனுல் நாட்டின் முழுவளர்ச்சிக்குச் சில தடைகள் உள்ளன. இதனலேயே போலந்து பொருளாதாரப் பிரச்சினைகட்கு உட்பட்டுள்ளது.

போலந்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்று தலைமறைவாக இயங்கி வருவதும் நன்கு தெரியப்பட்டதே, இந்நிலையில் சோவியத் பணிப்புரைகட்கு இயைய போலந்து அரசு அதிகாரிகள் நடப்பதால் நிலைமை மோசமாகுமேயன்றி சீரடையமாட்டாது.

போலந்திலுள்ள வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்கள் கூற்றுக்களின்படி இவ்வேலைநிறுத்தத்தைப் பயன்படுத்தி அரசாங்கம் பலரைக் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைத்திருப்பதாகத் தெரிகின்றது. சோவியத் ஏகாதிபத்தியத்தின் சுயரூபம் மேலும் மேலும் அம்பலமாகி வருகிறது என்பதில் ஐயமில்லை.

★

## காஸ்ரோவின் சதி!

பிற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதிலதிலே தனித்திறமைபெற்று விளங்கும் கியூபா அண்மையில் தென்னமெரிக்க கண்டத்திலுள்ள சூரிநாம் என்ற நாட்டில் இராணுவ சதிப்புரட்சி ஒன்றை ஏற்படுத்த முயன்று தோல்வி கண்டுள்ளது. சூரிநாம் மூன்றாவது உலகத்தைச் சேர்ந்த நாடு. அதனைச் சதிப் புரட்சியால் திசைதிருப்பி சோவியத் மண்டலத்திற்குள் ஈர்க்க கியூபா முயன்றது; தோல்வி கண்டது. அணிசேரா இயக்கத்தின் தலைமைப் பதவியை வகிக்கும் கியூபா அப்பதவிக்கு முற்றிலும் பொருந்தாத செயல்களில் ஈடுபடுவது தன்னிச்சையாலா’ சோவியத் கட்டளைகளினலா? கடந்த யூலை மாதம் நிகாரகுவா தேசத்து புரட்சியின் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்குச் சென்றிருந்த சூரிநாம் இராணுவ அதிகாரிகளுடன் கஸ்டிரோ புரட்சிச் சதிபற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தியதாக இப்போது செய்திகள் வெளியாகியுள்ளன. கஸ்டிரோவும் நிகராகுவாவுக்கு விருந்தினராகச் சென்றிருந்தார். கியூபா அண்மையில் தோல்விகள் பலவற்றைக் கண்டுவருவது கவனிக்கத் தக்கது. ‘கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு’ என்பார்கள் !

## குறிப்புகள்

கிட்டத்தட்ட 65கோடி மக்கள்தொகையை கொண்ட இந்தியாவில் 30 கோடியே 60 இலட்சம் மக்கள் வறுமையில் வாழ்கின்றனராம். இதில் 24 கோடியே 75 இலட்சம் பேர் கிராமப்புறங்களிலும் 5கோடி பேர் நகரங்களிலும் வாழ்கின்றனர் என்று இந்திய அரசு வெளியிட்டுள்ள புள்ளிவிபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில் நடைபெற்ற ஆசிய பசுபிக் பிராந்திய காமன்வெல்த் மாநாட்டில் உரையாற்றிய சிங்கப்பூர் பிரதமர் லீகுவான்யீ ஆப்கான் ஆக்கிரமிப்புக்கு சோவியத் யூனியனையும் கம்பூச்சிய ஆக்கிரமிப்புக்கு வியட்னுமையும் மிக வன்மையாக கண்டித்து பேசினர். இது இந்திராகாந்திக்கு முகத்தில் அடி வீழ்ந்ததுபோல் இருந்தது.

**இன்றைய உலக நிலைமை புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பைக் கோருகின்றது!**

# மலையகத்தில் அரசியல் அலை வீசுகிறதாம்

## தொண்டமானும் - இ. தொ. கா. வும் பெரும் ஆரவாரம்

"தொழிற்சங்கம் வேறு; அரசியல்வேறு; நமக்கு அரசியல் வேண்டாம்" என வேதம்படித்த இ. தொ. கா. வும் அதன் தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமானும் இப்பொழுது "இ.தொ.கா. அரசியல் பிரிவு" என்ற பெயரில் புதுத்தொழில் ஆரம்பித்துள்ளனர். இது ஏற்கனவே உள்ள பழைய தொழிற்சங்கத் தொழிலுடன் கூட்டாக இணைந்து செயற்படவுள்ளது என்று அறியப்படுகின்றது.

காலங்காலமாக மலையக மக்களின் சந்தாப் பணத்தில் உண்டு கொழுத்தவர்கள் இன்று புது வேடத்துடன் உலாவ ஆரம்பித்துள்ளனர். ஸ்ரீமா—சாஸ்திரி ஒப்பந்தத்தின்மூலம் சிலருக்குக்கிடைத்துள்ள வோட்டுரிமையைப் பயன்படுத்தி அரசியல் விளையாட்டை நடாத்த இப்பொழுதே தொண்டமானும் இ.தொ.கா'வும் அடிகோலியுள்ளனர்.

தற்போது அரசியல் மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்கு வருமானம்தேடிக் கொடுக்கப்போகும் இ.தொ.கா. தலைவர்களையும் அவர்களின் பிற்போக்குத்தனத்தையும் மலையக மக்களுக்குத் தெளிவானது இன்று நேற்று அல்ல. சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் நடந்த பதுளை "தலைகலையல் போராட்டம்" உருளகொல்லை 'B. O P. தேயிலைத் தூள் போராட்டம்' போன்றவைகளிலிருந்து அண்ணல்களின் எச்சில் புத்தியை மக்கள் அறிந்தே வருகின்றனர்.

அதுமட்டுமல்ல யூ.என்.பி. அரசுடன் ஒட்டிக்கொண்டு தான் என்ன செய்கின்றார் என்பதும் தெரிந்ததே. 1977 தேர்தலில் சுயேச்சையாக நின்று வெற்றி பெற்றால் வேண்டியதைச் செய்வேன் என்று கூறிய 'தொண்டர் குலாம்' என்னதான் வேண்டியதைச் செய்துள்ளது?

ஆட்சியாளருடன் இணைய முன்பு 'மாதச்சம்பளம்' என மாரடைக்க கோஷித்தவர்கள் தற்போது அரசியல் மேடைகளில்ல அவ்வாறான தொழிலாளர்களின் உயிர் நாடிபோன்ற கோரிக்கைகளை மறந்த பாடமாகக் கருதுகின்றாரே? அதுவா வேண்டியது???

அத்தியாவசிய பொதுச் சேவைச் சட்டம் போன்ற அடக்குமுறைச் சட்டங்களுக்கு ஆதரவு நல்கி தொழிலாளர்களின் கழுத்தில் சுருக்கைப் போட்டு சனாதிபதியின் கையிலே கயிற்றைக் கொடுத்துள்ளதைதானு தோட்டத் தொழிலாளர்கட்கு தொண்டமான் ஆற்றிய தொண்டு.

இவ்வாறு கடந்த காலத்தில் எதையெதையெல்லாம் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை என்றார்களோ அதையெல்லாம் மறந்துவிடுவது மட்டுமன்றி மறுத்தும் வருகின்றனர். இது போன்று—நமது வரலாற்றுக் காலத்திலேயே எத்தனையோ அயோக்கியத்தனமான வேலைகள் செய்து வருபவர்கள். இப்போது வந்து அரசியல் பேசுவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது?...? அரசியல் பேசுவதற்கு ஒருசிறந்த பொருத்தமான இரகமாக "இந்திய வம்சாவழியினரை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்" என்பதைப் பாடிவந்து ஒட்டுக்கேட்டால் மட்டும் மலையகமக்கள் ஏமாந்துவிடமாட்டார்கள்; ஏனெனில் 'சாண் ஏறுதவர்களா முழம் ஏறப்போகின்றார்கள்' என்பது மக்களின் மனதில் பதிந்த பாடமாயிற்றே.

எனவே தோட்டப்பாட்டாளிகளுக்கு துரோகிகளின் அரசியல் தேவையில்லை: இன்று நேற்று அல்ல, எத்தனையோ வரலாற்றுக் காலமாக தொழிற்சங்கத்திற்கும் அப்பாற் சென்று பல உரிமைப் போராட்ட இயக்கங்கள் நடாத்திய அனுபவமிக்கவர்களுக்கு இவர்கள் அரசியல் கற்றுக்கொடுக்கத் தேவைதானா? மக்கள் தங்களுக்கான நேர்மையான பாட்டாளி வர்க்க அரசியலில் நம்பிக்கை உள்ளவர்கள். தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை மட்டுமன்றி முழு உழைக்கும் மக்களின் விடுதலைக்கும் பாட்டாளி வர்க்க அரசியலே தீர்வு காணக்கூடியது என்பதில் தெளிவு கொண்டவர்களாக வளர்ந்து வருகின்றனர். இந்நிலையில் இறக்க வேண்டிய அரசியலுக்கு உயிர் கொடுக்க ஒட்டுக்கேட்டு வருபவர்களுக்கு தோட்டத் தொழிலாளிகள் தகுந்த பாடம் கற்பிப்பார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

## வேலைநிறுத்தம் செய்தோருக்கு மீண்டும் வேலை கொடு

(1-ம் பக்கத் தொடர்)

கொண்டதனாலேயே அரசாங்கம் வங்கி ஊழியர்க்கும் சில துறையிலுள்ள அதிகாரிகட்கும் சம்பளத்தை அதிகரித்தது. இதே காரணத்திற்காகவே உயர்மட்டத்தில் உள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் ஊதியத்தின் மூன்றில் ஒன்று சம்பள உயர்வாகக் கொடுக்கப்பட்டது. வேலை நிறுத்தம் செய்த கீழ் – நடுத்தர ஊழியர்களும் தொழிலாளி வர்க்கமும் பட்டினி மட்டத்திலும் சீவிக்கக்கூடியதாயிருந்த அரிசிப் பங்கீடும் — ஏனைய மானியங்களும் பறிக்கப்பட்டிருந்தனர் என்பது மிகவும் முக்கியமானது. இவர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கியது விளையாட்டிற்காகவல்ல, எந்த ஒரு அரசாங்கத்தையும் கவிழ்க்கவல்ல, செல்வாக்கிழந்த அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்தவும் அல்ல. அவர்கள் பெற்ற அற்ப ஊதியத்தைக்கொண்டு உயிர்வாழ முடியாது என்ற நிலையிலேயே வேலைநிறுத்தத்தில் இறங்கினர்.

அரசாங்கத்தின் தற்கொலைக்கொப்பான கொள்கையால் அதன் கஷ்டங்களை ஒருவர் விளங்கிக்கொள்ளலாம்.

1) எமது மூலப்பொருள்களைக் குறைந்த விலையில் வாங்கி அவர்களின் பாவனைப் பொருட்களை எமது நாட்டில் கூடிய விலையில் விற்பதற்கு ஏதுவாக அன்னிய பல்தேசிய நிறுவனங்களை வசீகரிக்கும் முகந்தியாக அரசு ரூபாவை மதிப்பிறக்கம் செய்தது. இதன் விளைவால் எமது மக்கள் அதிகம் கொடுக்கவேண்டி யேற்பட்டது.

2) அன்னிய மூலதனத்தை தாஜாபண்ணுவதற்காக அது இறக்குமதியைத் தாராளமாக்கியது. எமது சந்தைகளில் இறக்குமதிப் பொருள்கள் குவிந்து கிடந்தன. எமது தேசிய கைத்தொழில்கள் கிறிச் என்ற சத்தத்துடன் நின்றது; எமது பணமும் வடிந்தோடியது.

3) திருப்பிச் செலுத்தும் எமது வல்லமையை அன்னிய பணம் கொடுத்தோரை நம்பவைக்கும் முயற்சியாக அது மானியங்களை மீளப்பெற்றது. இது மக்களைப் பட்டினிக்குள் தள்ளியது.

சர்வதேச நாணய நிதி நிறுவனத்தையும், உலகவங்கியையும் எமக்குக் கடன்தர இணங்க வைத்து யூ.என்.பி. யின் வர்க்க நேசர்களான இறக்குமதியாளர்களும் கட்டிட ஒப்பந்தக்காரருக்கும் அள்ளிக்கொட்டக்கூடிய அன்னிய மூலதனத்தை ஈர்த்தெடுப்பதற்கு இவை யாவும் போதுமானதாயிருக்கவில்லை. பலமும் ஸ்திரமும் என்ற ஒரு போலி நிலையைக் காட்டுவதற்கு இது தேவைப்பட்டது. இதற்காகவே சகல ஆட்சேப வெளிப்பாடுகளையும் நசுக்குவதற்கு காடைத்தனமும், பொலிஸ் பலாத்காரமும் பிரயோகிக்கப்பட்டது. இதற்காகவே ஜனநாயக, சுதந்திர அடிச்சுவடுகளை மறைப்பதற்கு ஏராளமான சட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

எவ்வாறாயினும் வேலைநிறுத்தத்தின்போது அரசாங்கம் காட்டிய பலப்பரீட்சை வெறும் புஸ்வாணமாகியது. மக்களின் கோபாவேசம், கொடூரமான முன்னெப்பொழுதுமில்லாத நடவடிக்கைகளினால் சர்வதேசரீதியான பாதகமான தாக்கங்களினால் அரசாங்கத்தை அதன் நிலைப்பாட்டிலிருந்து கீழே இறங்க நிர்ப்பந்தித்தது. வேலை நிறுத்தத்தை நசுக்குவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளை ஒவ்வொன்றாக அது அபகீர்த்தியுடன் மீளப் பெற்றுக் கொள்ள நேரிட்டது. [illegible] தொழிற்சங்க பணங்களை அது விடுவித்தது. பொதுக் கூட்டங்களுக்கான தடை நீக்கப்பட்டது. தொழிற்சங்க காரியாலயங்களைக் கைப்பற்றும் அதன் யோசனை கைவிடப்பட்டது. இறுதியாக பிரகடனப்பட்டிருந்த அவசரகாலச்சட்டம் இரத்துச் செய்யப்பட்டது. இராட்சதப்பேய்த் தோற்றமளித்த அரசாங்கத்தின் கால்கள் களிமண்ணினால் செய்யப்பட்டதென்பது புலனாயிற்று.

வேலை நிறுத்தக்காரர்களின் கோரிக்கைகளை வழங்கி அவர்களை மீண்டும் வேலையில் அமர்த்தும் பிரயோசனமான நடவடிக்கையைக் காலந்தாழ்த்திக் கொண்டிருக்கிறது. தனக்குத்தானே அவமானத்தைத் தேடிக்கொண்ட அரசாங்கம் தற்போதும் போலிக் கௌரவத்தை சிந்தித்துக் கொண்டிருக்கிறது. யூ. என். பி. அரசியல்வாதிகளுக்கு நிதானமான மனநிலையில்லை என்பதும் தமது முட்டாள்தனமான செயல்களின் விளைவைப் புரிந்து கொள்ள முடியாததும் துரதிஷ்டமானது. கருணை என்பது தார்மீகத்தின் பிரதான மூலப்பொருள் என்றபோதும், தார்மீகம்பற்றிச் சதா பேசிக்கொண்டிருக்கும் அரசாங்கம் எதுவித இரக்கமுமின்றி ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், அவர்களது மனைவிமார், பிள்ளைகளின் இன்னல்களைப் பாராமுகமாக இருக்கிறது. வேலை நிறுத்தம் செய்த அத்தனை தொழிலாளர்களையும் உடனடியாகவும், நிபந்தனையின்றியும் மீண்டும் வேலையில் அமர்த்தி அவர்களின் கோரிக்கைகளை வழங்கினால் அரசாங்கம் புத்திசாலித்தனமான காரியத்தைச் செய்ததாயிருக்கும். சில அரசியல்வாதிகள் தமது முக்கியத்துவத்தைப்பற்றி அதிகம் எண்ணிக்கொண்டிருப்பதைச் சரித்திரத்திலிருந்து [illegible] காலந்தாழ்த்தி [illegible] கற்றுக்கொள்ள [illegible]

4ம் பக்கத் தொடர்...

## உள்ளூர் உற்பத்தி

வரிப்பு 0·9 வீதமாக இருக்க 1979இல் 2·5 வீதமாகவிருந்தது. அரசாங்க மூலதனச் செலவில் மகாவலி அபிவிருத்தி அமைச்சுக்கென 1979 இல் 729 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இத்தளவு பணம் பெருமளவு தாரத்தில் பாய்ச்சப்படும் அளவிற்குக் கலிப்பண்டங்களின் நிரம்பல் கூடாதபோது விலைகளை இதிகிட்டமாக துரிதப்படுத்தும். இதற்காக வாங்கப்படும் வெளிநாட்டு கடன் வட்டி என்பன செலாவணிப் பிரச்சினையின் கடுமையைப் பெருப்பித்து விடும். இந்த விவசாயத் திட்டங்களைவிட வேறு பொருளாதாரத்தில் அவசியமாகும். கைத்தொழில் வளர்ச்சிக்கான செலாவணிக் கிடைப்பு நெருக்கடியை தடை செய்யும் என்பதும் வருந்தத்தக்குரியது.

முடிவாக அரசின் தாராளமான இறக்குமதிக் கொள்கை தொடருமானால் தேவையற்ற இலாபப்பண்ட இறக்குமதி கூடி செலாவணி விரயமாகும். மக்களின் வருமானத்தை இழுக்கும் தேவையற்ற பண்டங்களாலிருந்தால் தேசியசேமிப்பு 1977 இல் 17·6 வீதமாயிருந்து 1978 இல் 13·3 ஆகக் கரைந்து போயிற்று. உள்நாட்டு உற்பத்தித்துறைகள் மூடப்பட்டு உள்ளூர்த் தொழில் வாய்ப்பும் வீழ்ச்சியுறும் இந்த நிலையில் செலாவணித் தேவையின் தீவிரத்தின் மறுபுறம் இக்கொள்கைச் செலாவணி விரயத்துக்கும் வழிவகுக்கிறது. இலங்கையினால் தாங்கிக்கொள்ள முடியாத தீர்மானங்களையும் முரண்பாடான கொள்கைகளையும் அரசு தொடர்ந்து கையாளக் கூடாது, எரிபொருள் விலையேற்றம் தீவிரமடைந்து இறக்குமதிச்செலவை உயர்த்திச் செல்கின்ற இந்நிலையில் அரசுக்கு நிதானம்வேண்டும். இறக்குமதிச் செலவு எரிபொருள் விலையுயர்வால் 43 வீதம் கூடியிருக்கிறது. மதிப்பிறக்கத்தையும் செய்து கொண்டபோது செலாவணி பிரச்சினை பயங்கர வடிவம் பெறுவதோடு மக்களிடம் அபிவிருத்திக்கேற்ற சிக்கனப் பழக்கத்திற்கு எதிராகச் சீர்கெட்ட ஆடம்பரப் பழக்கமும் தீவிரமாகும். இவற்றை கருத்திற்கொண்டு அரசாங்கம் எதிர்காலத்தில் நிச்சயமாக இறக்குமதிக் கட்டுப்பாடுகளையும் கையாளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். செலாவணி விரயம் மத்திய கிழக்கு வருவாய் உட்பாய்ச்சலால் ஓரளவு உணர்த்தப்பட்டிருந்தாலும் இந்த நப்பாசை தொடரக் கூடாது. எதிர்காலத்தில் செலாவணி வெளிப்பாய்ச்சலை ஒழுங்குபடுத்தி இறக்குமதியை நெருக்குபடுத்தித் தேசியத் துறை விருத்தியின் பக்கத்தில் பார்வையைத் திருப்பாவிட்டால் இலக்குகளை விட்டு விலகித்தடுமாறவேண்டி இருப்பதோடு மக்களின் அதிருப்தியையும் தேடிக்கொள்ள வேண்டிய சூழ்நிலையே உருவாகும். ★

## சோஸலிச முதலாளியின் சுயரூபம்

(1-ம் பக்கத் தொடர்)

அந்த முதலாளிக்கே உழைக்கிருன். தொழிலாளியின் மேலதிக உழைப்பு முதலாளிக்கு கொள்ளை கொள்ளையாக இலாபம் என்ற வடிவில் பணத்தைக் குவிக்கிறது. விஷயம் அப்படியிருக்க தனக்கு 'நஷ்டம்' என்று அம்முதலாளி யாவரை ஏமாற்றப் பார்க்கின்ருர்.

இந்த முதலாளியின் கொடூரத்தனம் ஏற்கனவே யாழ்.நகரில் உள்ள 'சவர்க்கார முதலாளி'யின் இடத்தையும் மிஞ்சி விட்டது. சவர்க்கார முதலாளியோ "சைவத்திற்கும் தமிழுக்கும்" சேவை செய்வதாகக் காட்டிக்கொள்கிருர். அதே போல் இந்த சோஸலிச கராஜ் முதலாளி'யும் "தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் — மக்கள் இலக்கியத்திற்கும் (வயதுபோன அறவை இலக்கியம்)" சேவை செய்வதாகக் காட்டிக்கொள்கிருர். இவர் தனது கடந்தகால வரலாற்றை மறந்து பணத்திமிர் கொண்டு அலைகின்ருர். இந்த முதலாளி தனது பணத்தால்-செல்வாக்கினால் சகலதையும் செய்துவிடலாம் என நினைக்கிருர். ஆனால் பணம் சகலதையும் தீர்மானிக்கும் என்றால் உலகத்தொழிலாளிவர்க்கப் புரட்சிகள் வெற்றி பெற்றிருக்கமாட்டாதே; முதலாளித்துவம்தான் என்றென்றும் நிலைத்திருக்கும் அல்லவா?

சம்பளஉயர்வை மறுக்கும் இந்த 'சோஷலிச முதலாளி'யிடம் தமது அரசியல்-தொழிற்சங்கவேலைகட்கு ஆலோசனையும் ஆசியும் பெற்றுவரும் சண்முகதாசன் கோஷ்டியினர் வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களின் சங்கங்களுக்குத் தலைமறைவாகி விட்டனராம்; மேடைகளில் சம்பள உயர்வுக்கு சண்முகதாசன "முழக்கம்". மேடையால் கீழே இறங்கியதும் சம்பள உயர்வை மறுக்கும் முதலாளிக்கு வக்காலத்துவாங்கல்! என்னே அரசியல்—பிழைப்பு

அச்சிடுவிப்பு: யாழ்ப்பாண [illegible] அச்சகம் 9? ஸ்ராண்லி வீதி யாழ்ப்பாணம். வெளியீடு: [illegible] நவசக்தினம் 15/1, மின்சார நிலையவீதி யாழ்ப்பாணம்.